## கைத்தொழில்

### பொதுவான போக்குகள்

உற்பத்தியிலும் பகிர்ந்தளிப்பிலும் ஏற்பட்ட தடங்கல்களுக்குக் காரண மாயிருந்த உள்நாட்டுக் குழப்பங்கள் தொடர்ச்சியாகக் காணப்பட்டபோதும், கைத்தொழில்துறை 1989 இல் அதன் வளர்ச்சி வேகத்தைத் தொடர்ந்தும் பேணியது. 1988 இல் உண்மை நியதிகளில் 6 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்த கைத்தொழில்துறையின் வெளியீடு 1989 இல் மேலும் 6 சதவீதத்தால் விரி வடைந்தது. பாதகமான சூழ்நிலைகள் காணப்பட்டபோதும் பெருமளவிற்கு விரிவாற்றலை எடுத்துக்காட்டிய தனியார்துறைக் கைத்தொழிலிலிருந்தே இவ் வளர்ச்சி முழுவதும் பெறப்பட்டது. தனியார்துறைக் கைத்தொழிலின் வெளியீடு 15 சதவீதத்தினால் உயர்வடைந்தவேளையில் அரசதுறைக் கைத்தொழிலின் வெளியீடு 21 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது.

தனியார்துறையின் உற்பத்தியில் பெரும் அதிகரிப்புக்களைப் பதிவு செய்த துணைத்துறைகளாகப் புடவையும் அணியும் ஆடைகளும், உணவு குடிபானம் புகையிலை, உருவமைக்கப்பட்ட உலோக உற்பத்திகள் என்பன விளங்கின. 1989 இல் அரசதுறைக் கைத்தொழில் வெளியீட்டில் ஏற்பட்ட மிகக் கூடியளவு வீழ்ச்சிக்கு இலங்கைப் பெற்றோலியம், தேசிய புடவை, இலங்கைச் சீமெந்து, இலங்கை உருக்கு, தேசிய தாள் கூட்டுத்தாபனங்கள் போன்ற பல முக்கிய அரசதுறைக் கைத்தொழில்களில் ஏற்பட்ட உற்பத்தி வீழ்ச்சியே முக்கிய காரண மாக இருந்தது.

கைத்தொழில் ஏற்றுமதிகளின் பெறுமதி 1988 இன் ரூ. 226,740 இலட் சத்திலிருந்து 1989 இல் ரூ. 284,680 இலட்சத்திற்கு அதிகரித்தது. மொத்த ஏற்றுமதி வருவாய்களில் கைத்தொழில் ஏற்றுமதிகள் தொடர்பான பங்கு 1988 இன் 48 சதவீதத்திலிருந்து, 1989 இல் 51 சதவீதத்திற்கு அதிகரித்தது. பெரும் பாலான அண்மைய ஆண்டுகளைப் போன்றே கைத்தொழில் ஏற்றுமதிகளில் தைக்கப்பட்ட ஆடைகளும், பெற்றோலிய உற்பத்திகளும் முக்கிய இடத்தினை வகித்து, 1989 இன் கைத்தொழில் ஏற்றுமதிகளின் மொத்தப் பெறுமதியில் ஏறத்தாழ 70 சதவீதத்திற்கு வகைகூறின. இது கைத்தொழிலை அடிப்படை யாகக் கொண்ட பொருளாதாரத்தை வலுப்படுத்தும் பொருட்டுக் கூடியளவிற்குக் கூட்டிய பெறுமதியையுடைய உற்பத்திகளுக்கு மாறுகின்றதன் மூலம் கைத் தொழில் உற்பத்தி மற்றும் ஏற்றுமதி என்பனவற்றின் அமைப்பினைப் பன்முகப் படுத்த வேண்டியதன் அவசியத்தை எடுத்துக் காட்டுகின்றது.

### கைத்தொழில் கொள்கை

பொதுவான உள்நாட்டுக் கைத்தொழில் கொள்கையை மீளமைக்கும் நோக் குடன் கைத்தொழில் அமைச்சு புதியதொரு கைத்தொழில் உத்தியை அறிமுகப் படுத்தியது. இதற்கு 1989 திசெம்பர் 27 ஆம் நாளன்று அமைச்சரவையினால் ஒப்புதலளிக்கப்பட்டது. இப்புதிய உத்தி (அ) இறக்குமதிப் பதிலீட்டு கைத் தொழில்களை ஏற்றுமதி சார்ந்த கைத்தொழில்களுக்கு மாற்றுதல் (ஆ) பெரு மளவு தொழில் வாய்ப்பினையும் வருமான வாய்ப்புக்களையும் வழங்கல். (இ) பொருளாதாரத்தைப் பன்முகப்படுத்தலும் சென்மதி நிலுவையை உறுதிப் படுத்தலும். (ஈ) வருமானத்தையும் செல்வத்தையும் மிகக் கூடியளவிற்குச் சம மாகப் பங்கிடுவதனை உறுதிப்படுத்தல் என்பவற்றை நோக்சமாகக் கொண் டிருந்தது.

இவ்வுத்தி, முதலீடு மற்றும் ஏற்றுமதிகளுக்கான மூலவளங்களைத் திரட்டுதல், வெளிநாட்டு உள்நாட்டு முதலீடுகளை ஊக்குவித்தல், அரச தொழில் முயற்சிகளைச் சீரமைத்தல், போட்டிச் சூழலை மேம்படுத்தல், பெரிய சிறிய கைத்தொழில்களுக்கிடையே தொடர்புகளை ஏற்படுத்துதல், ஆராய்ச்சி, பயிற்சி மற்றும் சந்தைப்படுத்தலை ஊக்குவித்தல், முதலீடு, உற்பத்தி, ஏற்றுமதி என்பவற்றிற்கான நிருவாகத் தடைகளை அகற்றுதல் என்பவற்றை இலக்காகக்கொண்ட கொள்கை வழிமுறைகளையும் உள்ளடக்கியிருந்தது.

## உற்பத்தி

உண்மை நியதிகளில், 1989 இல் கைத்தொழில் வெளியீட்டின் பெறுமதி 6 சதவீதத்தினால் அதிகரித்திருப்பதாக மதிப்பிடப்பட்டுள்ளது. தனியார்துறைக் கைத்தொழில்களின் பொதுவான வெளியீடு 15 சதவீதம் கொண்ட அதிகரிப்பினைப் பதிவு செய்தவேளையில் அரசதுறைக் கைத்தொழிலின் வெளியீடு 21 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. பெற்றோலிய வெளியீட்டின் பெறுமதி நீக்கப்படுமிடத்து கைத்தொழில் உற்பத்தியின் பெறுமதி 10 சதவீதத்தினால் அதிகரித்திருப்பதாக மதிப்பிடப்பட்டது.

1989 இல் உற்பத்தியில் அதிகரிப்புக்களைப் பதிவு செய்த கைத்தொழில் துணைத்துறைகளாக உருவமைக்கப்பட்ட உலோக உற்பத்திகள் (17 சதவீதம்), புடவையும் அணியும் ஆடைகள் மற்றும் தோல் உற்பத்திகள் (16 சதவீதம்),

அட்டவணை 1,19

### கைத்தொழில் உற்பத்திகளின் பெறுமதி 1985–1989
### (நடைமுறை விலைகள்)

பத்து இலட்சம் ரூபாய்களில்

| வகை | 1985 | 1986 | 1987 | 1988 | 1989(அ) |
|---|---|---|---|---|---|
| 1. உணவு, குடிபானங்கள், புகையிலை ... | 10,497 | 12,129 | 12,962 | 14,675 | 18,458 |
| 2. புடவைகள், அணியும் ஆடைகள், தோல் உற்பத்திகள் ... | 9.505 | 12,088 | 15,428 | 18,166 | 22,072 |
| 3. மரத்துண்டு மர உற்பத்திகள் (தளபாடங்கள் உட்பட) | 705 | 632 | 677 | 640 | 667 |
| 4. தாள், தாள் உற்பத்திகள் ... | 1.187 | 1.289 | 1,372 | 1,492 | 1,456 |
| 5. இரசாயனம், பெற்றோலியம், நிலக்கரி, இறப்பர், பிளாத்திக்கு உற்பத்திகள் ... | 13,104 | 11,088 | 13,477 | 13,681 | 12,710 |
| 6. உலோகமல்லாக் கனிப்பொருள் உற்பத்திகள் (பெற்றோலியமும் நிலக்கரியும் தவிர்ந்த) ... | 1,854 | 2,053 | 2,156 | 2,267 | 2,474 |
| 7. அடிப்படை உலோக உற்பத்திகள் ... | 123 | 281 | 307 | 487 | 555 |
| 8. உருவமைக்கப்பட்ட உலோக உற்பத்திகள், பொறிகளும், போக்குவரத்துக் கருவிகளும் ... | 1,592 | 1,757 | 2,006 | 2.477 | 3,182 |
| 9. வேறு எவ்விடத்திலும் குறிப்பிடப்படாத உற்பத்திகள் ... | 125 | 136 | 155 | 178 | 231 |
| மொத்தம் | 38,692 | 41,453 | 48.540 | 54,063 | 61.805 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

(அ) தற்காலிகமானவை.

உணவு குடிபானம், புகையிலை (12 சதவீதம்) என்பன காணப்பட்டன. வெளியீட்டில் வீழ்ச்சிகளைப் பதிவு செய்த துணைத் துறைகளாகத் தாள், தாள் உற்பத்திகள் (20 சதவீதம்), இரசாயனம், பெற்றோலியம் மற்றும் பிளாத்திக்கு உற்பத்திகள் (18 சதவீதம்), அடிப்படை உலோக உற்பத்திகள் (11 சதவீதம்), உலோகமல்லாக் கனிப்பொருள் உற்பத்திகள் (5 சதவீதம்) என்பன காணப்பட்டன.

நடைமுறை நியதிகளில் கைத்தொழில் உற்பத்தியின் பெறுமதி 1989 இல் 14 சதவீதத்தினால் அதிகரித்திருப்பதாக மதிப்பிடப்பட்டது. புடவை, அணியும் ஆடைகள் மற்றும் தோல் உற்பத்திகள் 22 சதவீதத்தினாலும், உணவு குடிபானம் புகையிலை உற்பத்திகள் 26 சதவீதத்தினாலும், உலோகமல்லாக் கனிப்பொருள் உற்பத்திகள் 9 சதவீதத்தினாலும், அடிப்படை உலோக உற்பத்திகள் 14 சதவீதத்தினாலும் உருவமைக்கப்பட்ட உலோக உற்பத்திகள் 28 சதவீதத்தினாலும் அதிகரித்தன. இரசாயனங்கள், பெற்றோலியம் இறப்பர் மற்றும் பிளாத்திக்கு உற்பத்திகள், தாள் மற்றும் தாள் உற்பத்திகள் என்பனவற்றின் வெளியீடு முறையே 7 சதவீதத்தினாலும் 2 சதவீதத்தினாலும் வீழ்ச்சியடைந்தன.

புடவை, அணியும் ஆடை மற்றும் தோல் உற்பத்திகள் வகைகளின் திருந்திய செயலாற்றத்திற்கு முதலீட்டு ஊக்குவிப்பு வலையத்திற்குள்ளேயும், வெளியேயுமிருந்தான தைக்கப்பட்ட ஆடைகளின் வெளியீட்டில் ஏற்பட்ட கணிசமான அதிகரிப்பே முக்கிய காரணமாகும். எனினும் 1989 இல் இவ்வகையில் அரசதுறையின் வெளியீடு 2 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. உணவு, குடிபானம், புகையிலை வகையில் தனியார்துறைக் கைத்தொழில்கள் வரவேற்கத்தக்க செயலாற்றத்தினைக் காட்டியமைக்குப் புகையிலை, பால் உற்பத்திகள், மா, இனிப்பு மற்றும் இறைச்சி உற்பத்திகள் போன்ற பல உற்பத்திகளின் வெளியீட்டில் ஏற்பட்ட அதிகரிப்புக்களே பெருமளவிற்குக் காரணமாகும். இவ்வகையில் அரசதுறையும் அதிகரிப்புக்களைப் பதிவு செய்தமைக்கு இலங்கைச் சீனி மற்றும் தேசிய உப்புக் கூட்டுத்தாபனங்களின் வெளியீடு விரிவடைந்தமையே காரணமாகும்.

இரசாயனங்கள், பெற்றோலியம் மற்றும் பிளாத்திக்கு உற்பத்திகள் வகையில் இரசாயன உற்பத்திகள், பிளாத்திக்கு உற்பத்திகள், மருந்தாக்கல் பொருட்கள், சவர்க்காரம், பற்பசை, கிளிசறின் மற்றும் தீந்தைகள் ஆகிய தயாரிப்புக்களில் ஈடுபட்டிருந்த தனியார்துறைக் கைத்தொழில்கள் முக்கியமாக வெளியீட்டு மட்டங்களில் அதிகரிப்புக்களைப் பதிவு செய்தன. எனினும் இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் வெளியீட்டில் ஏற்பட்ட கணிசமான வீழ்ச்சியின் காரணமாக இவ்வகைக்கு அரசதுறையின் பங்களிப்பு மிகக் கூடியளவு வீழ்ச்சியைப் பதிவு செய்தது.

மர, மர உற்பத்திகள் வகையில் அதிகரித்த வெளியீட்டு மட்டம் தனியார் துறையில் பதிவு செய்யப்பட்டது. எனினும் இலங்கை ஒட்டுப்பலகை மற்றும் அரச மரக் கூட்டுத்தாபனங்களின் குறைக்கப்பட்ட வெளியீட்டு மட்டங்கள் அரசதுறையின் வெளியீட்டில் கணிசமான வீழ்ச்சியைத் தோற்றுவித்தன. தாள், தாள் உற்பத்திகளின் வெளியீட்டில் ஏற்பட்ட வீழ்ச்சி, தாள், தாள் உற்பத்திகளின் வெளியீட்டின் குறைந்த மட்டங்களுக்குப் பெருமளவு பொறுப்பாக இருந்தது. உருவமைக்கப்பட்ட உலோக உற்பத்திகள் துறையின் வெளியீட்டில் ஏற்பட்ட அதிகரிப்பிற்குத் தந்திக் கம்பிகள், நீர்ப் பம்பிகள், மின் கலங்கள், மின் குமிழ்கள், குளிர்சாதனப் பெட்டிகள், பொறித்தொகுதி மற்றும் கருவிகள் போன்ற தயாரிப்புக்களில் ஈடுபட்டிருந்த தனியார்துறைக் கைத்தொழில்களின் செயலாற்றமே ஒரே காரணமாகும்.

அரச துறையின் கைத்தொழில் உற்பத்திச் சுட்டெண்




இலங்கை மத்திய வங்கி

**அரச துறைக் கைத்தொழில்கள்***

உண்மை நியதிகளில் அரசதுறையின் கைத்தொழில்களின் வெளியீடு முன்னைய ஆண்டின் 1 சதவீத வீழ்ச்சியுடன் ஒப்பிடுகையில் 1989 இல் 21 சத வீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. இது இலங்கைப் பெற்றோலியம், தேசிய புடவை, இலங்கைச் சீமெந்து, இலங்கை உருக்கு, தேசிய தாள், இலங்கை எண்ணெய்க் கொழுப்பு, இலங்கை டயர் ஆகிய முக்கிய பல அரசதுறைக் கைத்தொழில் முயற்சிகளின் உற்பத்தியிலேற்பட்ட வீழ்ச்சிகளின் வெளிப்பாடாகும்.

அட்டவணை 1.20

**அரசதுறை முதன்மைக் கைத்தொழில்களின் வெளியீட்டுச் சுட்டெண் 1988 -- 1989 (1977=100)**

| வகை | 1987 | 1988 | 1989(அ) |
|---|---|---|---|
| 1. உணவு, குடிபானம், புகையிலை .. | 40.7 | 31.0 | 32.0 |
| 2. புடவைகள், அணியும் ஆடைகள், தோல் உற்பத்திகள் .. | 200.0 | 189.7 | 173.7 |
| 2.1 புடவைகள் .. | 271.3 | 257.6 | 236.2 |
| 3. மரத்துண்டு மர உற்பத்திகள் .. | 103.8 | 71.4 | 35.1 |
| 4. தாள், தாள் உற்பத்திகள் .. | 167.9 | 153.7 | 107.8 |
| 5. இரசாயன உற்பத்திகள் .. | 115.3 | 119.3 | 85.5 |
| 5.1 பெற்றோலிய உற்பத்திகள் .. | 115.9 | 120.7 | 85.6 |
| 6. உலோகமல்லாக் கனிப்பொருள் உற்பத்திகள் .. | 147.2 | 142.4 | 137.2 |
| 6.1 சீமெந்து .. | 177.3 | 175.1 | 164.8 |
| 7. அடிப்படை உலோக உற்பத்திகள் ... | 71.0 | 86.1 | 76.4 |
| 8. உருவமைக்கப்பட்ட உலோக உற்பத்திகள் .. | 102.5 | 65.5 | 32.5 |
| எல்லா வகைகளும் .. | 115.7 | 114.0 | 90.1 |
| பெற்றோலிய உற்பத்திகள் தவிர்ந்த | 115.4 | 106.4 | 95.0 |

அ) தற்காலிகமானவை.

மூலம் : இலங்கை மத்திய வங்கி.

இவ்வாண்டில் அரசதுறையின் கைத்தொழில் முயற்சிகளில் பெரும்பாலானவை குறைந்த செயலாற்றத்தினையே எடுத்துக் காட்டின. வெளியீட்டில் வீழ்ச்சியினைக் காட்டிய தொழில் முயற்சிகளாக இலங்கை ஒட்டுப்பலகை (65 சதவீதம்), அரச மரம் (35 சதவீதம்), தேசிய தாள் (30 சதவீதம்), இலங்கைப் பெற்றோலியம் (29 சதவீதம்), அரச அகழ்வு கனிப்பொருள் அபிவிருத்தி (20 சதவீதம்), இலங்கை தோல் உற்பத்திகள் (16 சதவீதம்), இலங்கை உருக்கு (11 சதவீதம்), தேசிய புடவை (8 சதவீதம்), அரச வன்கலம் (7 சதவீதம்), இலங்கைச் சீமெந்து (6 சதவீதம்), இலங்கை எண்ணெய் கொழுப்பு (6 சதவீதம்,) இலங்கை டயர் (3 சதவீதம்) ஆகிய கூட்டுத்தாபனங்கள் விளங்கின.

* அரச கூட்டுத்தாபனங்கள் அல்லது அரசினால் பொறுப்பேற்கப்பட்ட வர்த்தக முயற்சிகளைப் பகிரங்கக் கம்பனிகளாக மாற்றும் 1987 ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்க சட்டத்தின் கீழ் இவ்வாண்டில் பகிரங்கக் கம்பனிகளாக மாற்றப்பட்ட அரசதுறைக் கைத்தொழில் முயற்சிகள்

| | |
|---|---|
| அரச வடிசாலைகள் | (17.10.1989) |
| இலங்கை எண்ணெய் கொழுப்பு | (19.10.1989) |
| இலங்கைச் சீனி | (19.10.1989) |
| கொழும்பு வர்த்தகம் | (21.11.1989) |
| இலங்கை ஒட்சிசன் | (05.12.1989) |

என்பவற்றை உள்ளடக்கும்.

அட்டவணை 1.21

## கைத்தொழில் முயற்சிகளுக்கு அரசின் நிதி மாற்றல்கள் 1987—1989

ரூபா பத்து இலட்சம்

| கூட்டுத்தாபனங்கள்/முயற்சிகள் | மூலதனம் | | | நடைமுறை | | | மொத்தம் | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 1987 | 1988 | 1989(அ) | 1987 | 1988 | 1989(அ) | 1987 | 1988 | 1989(அ) |
| 1. தேசிய தாள் கூட்டுத்தாபனம் ... | — | — | — | 7.5 | 7.6 | — | 7.5 | 7.6 | — |
| 2. இலங்கை சீனிக் கூட்டுத்தாபனம் ... | 185.0 | 131.4 | 107.0 | — | — | 225.0 | 185.0 | 131.4 | 332.0 |
| 3. இலங்கை உருக்குக் கூட்டுத்தாபனம் ... | — | — | — | — | 48.3 | — | — | 48.3 | — |
| 4. தேசிய பாற்சபை ... | 1.9 | 2.5 | — | — | 28.9 | — | 1.9 | 31.4 | — |
| 5. அரச வளமாக்கி தயாரிப்புக்கூட்டுத்தாபனம் ... | — | — | — | 27.0 | 1.2 | — | 27.0 | 1.2 | — |
| 6. இலங்கை ஒட்டுப்பலகைக் கூட்டுத்தாபனம் ... | — | — | — | — | 7.1 | — | — | 7.1 | — |
| 7. தேசிய புடவைக் கூட்டுத்தாபனம் ... | 42.0 | 42.0 | 42.0 | — | — | — | 42.0 | 42.0 | 42.0 |
| 8. இலங்கை எண்ணெய் கொழுப்புக் கூட்டுத்தாபனம் | — | — | — | — | 8.5 | 5.6 | — | 8.5 | 5.6 |
| 9. அரச வன்கலக் கூட்டுத்தாபனம் ... | — | — | — | 0.6 | 3.5 | — | 0.6 | 3.5 | — |
| மொத்தம் ... | 228.9 | 175.9 | 149.0 | 35.1 | 105.1 | 230.6 | 264.0 | 281.0 | 379.6 |

(அ) மதிப்பிடப்பட்டவை.

மூலம்: திறைசேரி

இவ்வாண்டில் உற்பத்தி வெளியீட்டில் அதிகரிப்புக்களைப் பதிவு செய்த கூட்டுத்தாபனங்களாக இலங்கைக் கனிப்பொருள் மணல் (47 சதவீதம்), தேசிய உப்பு (41 சதவீதம்), அரச வடிசாலை (12 சதவீதம்), இலங்கைச் சீனி (7 சத வீதம்), இலங்கை மட்பாண்டம் (4 சதவீதம்) என்பன விளங்கின. இலங்கைக் கனிப்பொருள் மணல் கூட்டுத்தாபனத்தின் வெளியீட்டில் ஏற்பட்ட கணிசமான அதிகரிப்பிற்கு இவ்வாண்டில் இல்மனைட் வெளியீட்டில் ஏற்பட்ட பெருமளவு அதிகரிப்பும் களஞ்சியப்படுத்தும் வசதிகள் அதிகரித்தளவில் கிடைக்கத்தக்கதாக இருந்தமையுமே முக்கிய காரணமாகும். தேசிய உப்புக் கூட்டுத்தாபனத்தின் வெளியீடு அதிகரித்தமைக்குத் தீவின் வடக்குக் கிழக்குப் பிரதேசத்தின் பாது காப்பு நிலைமைகள் முன்னேற்றமடைந்தமையே முக்கிய காரணமாகும். அறு வடை செய்யப்பட்ட பரப்பளவு விரிவடைந்தமையும் நாட்டின் வடக்குக் கிழக்குப் பிரதேசத்தின் பாதுகாப்பு நிலைமைகள் முன்னேற்றம் கண்டமையும் இலங்கைச் சீனிக் கூட்டுத்தாபனத்தின் அதிகரித்த வெளியீட்டில் பிரதிபலித்தன.

இவ்வாண்டுக் காலத்தில் மின்வலு வழங்கல்களுக்கு ஏற்பட்ட தடைகளும், வேலைக்குவராமை, உற்பத்திப் பகிர்ந்தளிப்பு என்பனவற்றில் ஏற்பட்ட தடங்கல் களும் அரசதுறைக் கைத்தொழில்களின் செயலாற்றத்தில் பாதகமான தாக்கத் தைக் கொண்டிருந்தன. இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் வெளி யீட்டில் ஏற்பட்ட கணிசமான வீழ்ச்சிக்கு 1989 இன் முதற் காலாண்டில் பேணல் நோக்கங்களுக்காகத் தூய்மி 5 கிழமைகள் மூடப்பட்டிருந்தமையே ஓரளவு காரணமாகும். குறுகிய வேலை நேரங்களும், வேலைக்கு வராமையும் அரசதுறைக் கைத்தொழில் உற்பத்தியில் ஏறத்தாழ 23 சதவீதத்திற்கு வகை கூறும் புடவைக் கூட்டுத்தாபனத்தின் வெளியீட்டில் வீழ்ச்சியினைத் தோற்று வித்தன. இலங்கை டயர் கூட்டுத்தாபனத்தின் வெளியீட்டில் ஏற்பட்ட வீழ்ச்சிக்கு உள்நாட்டுக் குழப்பங்களின் விளைவாகக் குறைக்கப்பட்ட வேலை நேரங்களே முக்கிய காரணமாகும். மரங்களின் பற்றாக்குறையான வழங்கல் அரச மரம் மற்றும் ஒட்டுப்பலகைக் கூட்டுத்தாபனங்களின் உற்பத்தியின் மீது பாதகமான தாக்கத்தினைக் கொண்டிருந்தது. விலைத் திருத்தங்களின் விளைவாகக் கேள்வி குறைவடைந்தமையே இலங்கை எண்ணெய் கொழுப்புக் கூட்டுத்தாபனத்தின் குறைக்கப்பட்ட உற்பத்திக்கு முக்கிய காரணமாக இருந்தது.

கூட்டுத்தாபனங்களின் துறைவாரியான பகுப்பாய்வு நியதிகளின்படி உணவு, குடிபான வகை மட்டுமே 1989 இல் வெளியீட்டில் அதிகரிப்புக்களைப் (4 சத வீதம்) பதிவு செய்த ஒரே வகையாகும். வெளியீட்டில் வீழ்ச்சியைப் பதிவு செய்த ஏனைய துறைகளாக உருவமைக்கப்பட்ட உலோக உற்பத்திகள் (50 சதவீதம்), மர, மர உற்பத்திகள் (50 சதவீதம்), இரசாயன உற்பத்திகள் (28 சதவீதம்), தாள், தாள் உற்பத்திகள் (30 சதவீதம்), அடிப்படை உலோக உற்பத்திகள் (11 சதவீதம்), புடவை அணியும் ஆடைகள் தோல் உற்பத்திகள் (8 சதவீதம்), உலோகமல்லாக் கனிப்பொருள் உற்பத்திகள் (4 சதவீதம்) ஆகியன விளங்கின.

இவ்வாண்டில் அரசதுறை கைத்தொழில் முயற்சிகளுக்கான வரவு செலவுத் திட்ட மாற்றல்கள் ரூ. 3,800 இலட்சமாக விளங்கியதுடன் இதில் ரூ. 2,310 இலட்சம் (61 சதவீதம்), நடைமுறை மாற்றல்களாகவும் மிகுதி ரூ. 1,490 இலட்சம் (39 சதவீதம்) மூலதன மாற்றல்களாகவும் விளங்கின. 1989 இன் அரச கூட்டுத்தாபனங்களுக்கான மொத்த வரவு செலவுத்திட்ட மாற்றல்களில் ரூ. 3,320 இலட்சம் அல்லது 68 சதவீதத்தினை இலங்கைச் சீனிக் கூட்டுத் தாபனம் பெற்றது. 1989 இல் வரவு செலவுத்திட்ட மாற்றல்களைப் பெற்ற ஏனைய கைத்தொழில் முயற்சிகளாக அரச வன்கலம், தேசிய புடவை, இலங்கை எண்ணெய்க் கொழுப்புக் கூட்டுத்தாபனங்கள் விளங்கின.

**வலுவும் எரிபொருளும்**

இலங்கை மின்சபை தவிர்ந்த ஏனையவற்றுக்கான கைத்தொழில் எரிபொருளின் விற்பனை 1989 இல் 7.8 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. உலை யெண்ணெயின் விற்பனை 8.2 சதவீதத்தினால் விரிவடைந்தவேளையில் பார டீசலின் விற்பனை இவ்வாண்டில் 0.5 சதவீதத்தால் அதிகரித்தது.

1989 இல் கைத்தொழிலில் மின்வலுவின் பயன்பாடு 3.7 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. இதற்கு உள்நாட்டுக் குழப்பங்களின் காரணமாக அரசதுறைக் கைத்தொழில்களின் மின்வலு நுகர்வு வீழ்ச்சியடைந்தமையே பெருமளவு காரணமாகும். 1989 இல் சிறிய, நடுத்தரக் கைத்தொழில்களின் மின்வலுப் பயன்பாடு முறையே 4.3 சதவீதத்தினாலும், 0.4 சதவீதத்தினாலும் அதிகரித்தவேளையில் பெரிய கைத்தொழில்களின் நுகர்வு 9.6 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது.

அட்டவணை 1.22

**கைத்தொழிலில் வலு, எரிபொருள் என்பனவற்றின் பயன்பாடு 1988—1989**

| விடயம் | 1988 | 1989(அ) |
|---|---|---|
| 1. மின்வலு (கிகாவாட் மணித்தியாலங்கள்) (ஆ) ... ... ... | 905.4 | 872.0 |
| 1.1 சிறு கைத்தொழில் ... ... ... | 41.8 | 43.6 |
| 1.2 நடுத்தரக் கைத்தொழில் ... ... ... | 479.5 | 481.3 |
| 1.3 பெரிய கைத்தொழில் ... ... ... | 384.1 | 347.1 |
| 2. கைத்தொழில் எரிபொருளின் உள்நாட்டு விற்பனைகள் ... ... ('000 மெற்றிக் தொன்கள்) (இ) ... ... ... | 186.8 | 172.3 |
| 2.1 பார டீசல் ... ... ... | 21.3 | 21.4 |
| 2.2 உலை எண்ணெய் ... ... ... | 165.5 | 150.9 |

மூலங்கள்: இலங்கை மின் சபை.
இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம்.

(அ) தற்காலிகமானவை.

(ஆ) தயாரிப்பு, ஏற்றுமதிப் பதனிடல் கைத்தொழில்களை உள்ளடக்குகின்றது. சிறுகைத்தொழில் 50 கிலோ வாட்டுக்குக் குறைந்ததும், நடுத்தரக் கைத்தொழில் 50–500 கி. வாட்டையும், பெரும் கைத்தொழில் 500 கி. வாட்டுக்கு மேற்பட்ட இயலளவினையும் கொண்ட கூறுகளாகும்.

(இ) இலங்கை மின்சபைக்கான விற்பனைகள் நீங்கலாக.

**கைத்தொழில்களுக்கான வசதிகள்**

ஆய்விற்குரிய ஆண்டில் கைத்தொழில்துறை தொடர்ந்தும் சலுகை நியதிகளில் நிதியியல் உதவிகளைப் பெற்றன. மத்திய வங்கியின் நடுத்தர நீண்டகால கொடுகடன் நிதியம், தேசிய அபிவிருத்தி வங்கியின் சிறிய நடுத்தர அளவுக் கைத்தொழில்கள் கொடுகடன் உத்தரவாதத் திட்டம் என்பனவற்றின் கீழ் கைத்தொழில்கள் நிதியியல் உதவிகளைப் பெற்றன. அத்துடன் இலங்கை அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனம், தேசிய அபிவிருத்தி வங்கி, வர்த்தக வங்கிகள் என்பன கைத்தொழில் முயற்சிகளுக்குக் கடன்கள், பங்குகளைக் கொள்வனவு செய்தல் என்பனவற்றில் நேரடி நிதி உதவிகளை வழங்கின.

1989 இல் மத்திய வங்கியானது வர்த்தக வங்கிகள் மற்றும் ஏற்றுமதி அபிவிருத்திச் சபை என்பனவற்றின் ஒத்துழைப்புடன் நடுத்தர, நீண்டகால கொடுகடன் நிதியிடலைத் தொடர்ந்தும் தொழிற்படுத்தியது. மத்திய வங்கியின் நடுத்தர நீண்டகாலக் கொடுகடன் நிதியிடலின் கீழான மீள் நிதியிடலின் ஒப்புதல்கள் 1989 இல் கணிசமான அதிகரிப்பினைப் பிரதிபலித்தன. வகைகள் ii, iii, iv இன் கீழ் வழங்கப்பட்ட மீள் நிதியிடல்களின் மொத்தத் தொகை முன்னைய ஆண்டின் ரூ. 2,550 இலட்சத்துடன் ஒப்பிடுகையில் 1989 இல் ரூ. 4,410 இலட்சமாக விளங்கியது. இவ்வதிகரிப்பிற்குச் சுற்றுலா விடுதிகளின் புத்தாக்கத்திற்காகச் சுற்றுலாக் கைத்தொழிலில் காணப்பட்ட ஒப்புதல்களின் எண்ணிக்கையில் ஏற்பட்ட உயர்வே முக்கிய காரணமாகும். நலிவுற்ற கைத்தொழில்கள் வகையின் புத்தாக்கம் ரூ. 2,980 இலட்சம் கொண்ட பெரும் பங்கை ஈர்த்துக் கொண்டது. ஏற்றுமதித்துறையினால் பெறப்பட்ட மீள் நிதியிடல் தொகை 1988 இன் ரூ. 190 இலட்சத்திலிருந்து 1989 இல் ரூ. 320 இலட்சத்திற்கு அதிகரித்தது. கைத்தொழில் தொடர்பான மீள் நிதியிடல் 1988 இன் ரூ. 20 இலட்சத்துடன் ஒப்பிடுகையில் 1989 இல் ரூ. 210 இலட்சமாக விளங்கியது.

### அட்டவணை 1.23

### தேசிய அபிவிருத்தி வங்கியினால் இசைவளிக்கப்பட்ட மீள் நிதியிடல் நிதி உதவிக்கான ஒப்புதல்கள்—1989

| வகைகள் | மீள் நிதியிடலுக்கான ஒப்புதலளிப்பு சி.ந.கை. திட்டம் III | | நேரடி நிதி உதவி | | மொத்தம் | |
|---|---|---|---|---|---|---|
| | எண் | தொகை (ப.இ.ரூ.) | எண் | தொகை (ப.இ.ரூ.) | எண் | தொகை (ப.இ.ரூ.) |
| 1. உணவு, குடிபானம், புகையிலை ... | 117 | 104 | 18 | 179 | 195 | 283 |
| 2. புடவைகள், அணியும் ஆடைகள் தோல் உற்பத்திகள் ... | 111 | 70 | 17 | 115 | 128 | 185 |
| 3. மரத்துண்டு மர உற்பத்திகள் (தளபாடங்கள் உட்பட) ... | 49 | 16 | 3 | 8 | 52 | 24 |
| 4. தாள், தாள் உற்பத்திகள் | 34 | 18 | 5 | 28 | 39 | 46 |
| 5. இரசாயனங்கள், பெற்றோலியம், நிலக்கரி இறப்பர், பிளாத்திக்கு உற்பத்திகள் ... | 60 | 62 | 19 | 165 | 79 | 227 |
| 6. உலோகமல்லாக் கனிப்பொருள் உற்பத்தி (பெற்றோலியமும் நிலக்கரியும் தவிர்த்து) | 98 | 24 | — | — | 98 | 24 |
| 7. அடிப்படை உலோக உற்பத்திகள் ... | — | — | 2 | 14 | 2 | 14 |
| 8. உருவமைக்கப்பட்ட உலோக உற்பத்திகள் பொறிகளும், போக்குவரத்து கருவிகளும் | 62 | 17 | 69 | 433 | 131 | 456 |
| 9. வேறு எங்கும் குறிப்பிடப்படாத உற்பத்திகள் ... | 85 | 50 | 11 | 136 | 96 | 196 |
| மொத்தம் ... | 676 | 361 | 144 | 1,084 | 820 | 1,445 |

மூலம்: தேசிய அபிவிருத்தி வங்கி.

*1989* திசெம்பர் இறுதியில் மத்திய வங்கி ரூ. *13,930* இலட்சம் கொண்ட கடன் பகிர்ந்தளிப்புக்களை உள்ளடக்கத்தக்க விதத்தில் *2,531* உத்தரவாதங்களை வழங்கியது. ஆண்டின் இறுதியில் *230* கடன்கள் தொடர்பாக ரூ. *520* இலட்சம் கொண்ட தொகை முழுமையாகப் பெறப்பட்டது. வெளிநிற்கும் கடன்வகையைப் பொறுத்தவரை *548* கடன்கள் தொடர்பாக ரூ. *2,680* இலட்சம் கொண்ட தொகை நிலுவையில் உள்ளது. *1989* இறுதியில் மத்திய வங்கி *57* கோரல்களைத் தீர்ப்பனவு செய்வதற்காக ரூ. *90* இலட்சம் கொண்ட தொகையைச் செலுத்தியது.

தேசிய அபிவிருத்தி வங்கி கைத்தொழில் செயற்றிட்டங்களுக்குக் கடன்கள் மற்றும் பங்குகளைக் கொள்வனவு செய்தல் ஆகிய வழிகளில் நேரடி நிதி உதவிகளை வழங்கியது. *1988* இன் ரூ. *8,400* இலட்சம் செலவினைக் கொண்ட *109* செயற்றிட்டங்களுடன் ஒப்பிடுகையில் *1989* இல் தேசிய அபிவிருத்தி வங்கி நேரடி நிதி உதவிக்காக ரூ. *10,840* இலட்சம் செலவினைக் கொண்ட *144* செயற்றிட்டங்களுக்கு ஒப்புதலளித்தது. இவ்வுதவியில் பெரும் பங்கினைப் பெற்ற கைத்தொழில் வகைகளாக உணவு, குடிபானம், புகையிலை, இரசாயனம், பெற்றோலியம், நிலக்கரி, இறப்பர், பிளாத்திக்கு உற்பத்திகள், புடவை அணியும் ஆடைகள் தோல் உற்பத்திகள் என்பன காணப்பட்டன.

*1989* இல் வர்த்தக வங்கிகள் கைத்தொழில்களுக்குத் தொடர்ந்தும் நிதி உதவிகளை வழங்கின. *1989* செத்தெம்பர் இறுதியில் கைத்தொழில் நோக்கங்களுக்கான முற்பணங்கள் ரூ. *125,360* இலட்சமாக விளங்கின. வர்த்தக வங்கி முற்பணங்களில் தனியார்துறைக் கைத்தொழில்கள் ரூ. *91,680* இலட்சத்தினை ஈர்த்துக் கொண்டவேளையில் அரசதுறைக் கைத்தொழில் கூட்டுத்தாபனங்கள் ரூ. *33,680* இலட்சத்தினைப் பெற்றன.

### தனியார் வெளிநாட்டு முதலீடு

### வெளிநாட்டு முதலீட்டு மதியுரைக்குழு

கொழும்பு பெரும்பாகப் பொருளாதார ஆணைக்குழுவிற்கு வெளியேயுள்ள வெளிநாட்டு முதலீடுகளை இணைக்கும் வெளிநாட்டு முதலீட்டு மதியுரைக்குழு *1989* இல் *62* செயற்றிட்டங்களுக்கு ஒப்புதலளித்ததுடன் இதில் *39* தயாரிப்புத் துறையில் காணப்பட்டன. இவ் *62* செயற்றிட்டங்களினதும் எதிர்பார்க்கப்பட்ட மொத்த முதலீடு ரூ, *13,700* இலட்சமாக விளங்கியதுடன் இதில் ரூ. *6,050* இலட்சம் அல்லது *44* சதவீதம் வெளிநாட்டு முதலீடுகளை உள்ளடக்கியிருந்தது. ஒப்புதலளிக்கப்பட்ட செயற்றிட்டங்களின் தொழில்வாய்ப்பு உள்ளார்ந்த வளம் *4,999* ஆட்களைக் கொண்டிருந்தது.

தயாரிப்புத்துறையில் ஒப்புதலளிக்கப்பட்ட *39* செயற்றிட்டங்களில் *11* இரசாயனம், பெற்றோலியம், நிலக்கரி, இறப்பர், பிளாத்திக்கு உற்பத்திகள் வகையில் காணப்பட்டது. ஒப்புதலளிக்கப்பட்ட ஏனைய தயாரிப்புக் கைத்தொழில்களாகப் புடவை, அணியும் ஆடைகள், தோல் உற்பத்திகள் (*6* செயற்றிட்டங்கள்) தாள், தாள் உற்பத்திகள் (*3* செயற்றிட்டங்கள்), உலோகமல்லாக் கனிப்பொருள் உற்பத்திகள் (*6* செயற்றிட்டங்கள்), அடிப்படை உலோக உற்பத்திகளும், உருவமைக்கப்பட்ட உலோக உற்பத்திகளும் (*3* செயற்றிட்டங்கள்), ஏனைய கைத்தொழில்கள் (*7* செயற்றிட்டங்கள்) என்பன விளங்கின. தயாரிப்புத்துறையில் ஒப்புதலளிக்கப்பட்ட செயற்றிட்டங்களின் தொழில் வாய்ப்பு உள்ளார்ந்த வளம் *3,957* ஆட்களாகும்.

1989 இல் வெளிநாட்டு முதலீட்டு மதியுரைக்குழு ரூ. 241,320 இலட்சம் கொண்ட எதிர்பார்க்கப்பட்ட முதலீட்டுச் செலவுடன் 614 செயற்றிட்டங்களுக்கு ஒப்புதலளித்ததுடன் இதில் ரூ. 120,080 இலட்சம் கொண்ட எதிர்பார்க்கப்பட்ட முதலீட்டுடன் 320 செயற்றிட்டங்கள் இவ்வாண்டில் செயற்பட்டன. தொழிற்படும் செயற்றிட்டங்களைப் பொறுத்தவரையில் தயாரிப்புத்துறையில் ரூ. 37,050 இலட்சங் கொண்ட எதிர்பார்க்கப்பட்ட மூலதனத்துடன் 166 செயற்றிட்டங்கள் காணப்பட்டன. இம்முதலீட்டில் வெளிநாட்டுக்கூறு ரூ. 17,020 இலட்சத்தினை அல்லது 46 சதவீதத்தினைக் கொண்டிருந்தது. தயாரிப்புத்துறையில் செயற்றிட்டங்களின் எண்ணிக்கை (55) முதலீட்டுத் தொகை (ரூ. 9,390 இலட்சம்) ஆகிய இரு நியதிகளிலும் புடவை, அணியும் ஆடைகள், தோல் உற்பத்திகள் என்பன பெரும் முதலீட்டுத் தொகைகளாகத் தொடர்ந்தும் விளங்கின. ஏனைய தயாரிப்பு நடவடிக்கைகளும் பெருமளவு முதலீடுகளைக் கவர்ந்தன. 1989 இல் பெருமளவு முதலீடுகளைப் பதிவு செய்த வகைகளிடையே உணவு, குடிபானம், புகையிலை (ரூ. 7,010 இலட்சம்), உலோகமல்லாக் கனிப்பொருள் உற்பத்திகள் (ரூ. 7,450 இலட்சம்), அடிப்படை, உலோக மற்றும் உருவமைக்கப்பட்ட உலோக உற்பத்திகள் (ரூ. 5,980 இலட்சம்), இரசாயனம், பெற்றோலியம், நிலக்கரி, இறப்பர், பிளாத்திக்கு உற்பத்திகள் (ரூ. 5,420 இலட்சம்) என்பன காணப்பட்டன. 1989 இறுதியில் வெளிநாட்டு முதலீட்டு மதியுரைக்குழுவின் தொழிற்படும் செயற்றிட்டங்களிலுள்ள உண்மையான தொழில்நிலை 53,697 ஆட்களாக விளங்கியதுடன் இதில் 40 சதவீதத்தினர் (அல்லது 21,401 ஆட்கள்) புடவை அணியும் ஆடைகள், தோல் உற்பத்திகள் ஆகிய துணைத்துறைகளில் காணப்பட்டனர்.

### முதலீட்டு ஊக்குவிப்பு வலயங்கள்

முதலீட்டு ஊக்குவிப்பு வலயங்களின் இணைப்பிற்குப் பொறுப்பாகவிருக்கும் கொழும்பு பெரும்பாகப் பொருளாதார ஆணைக்குழு 1989 இல் 24 செயற்றிட்டங்களுக்கு ஒப்புதலளித்ததுடன் 1989 இறுதியில் ஒப்புதலளிக்கப்பட்ட செயற்றிட்டங்களின் மொத்த எண்ணிக்கை 308 ஆக விளங்கியது. 1989 இன் இறுதியில் ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்ட 178 செயற்றிட்டங்களில் 118 வர்த்தக உற்பத்தியிலீடுபட்டிருந்தன. இச்செயற்றிட்டங்களில் 70 கட்டுநாயக்கா முதலீட்டு ஊக்குவிப்பு வலயத்திற்குள்ளேயும், 23 பியகம முதலீட்டு ஊக்குவிப்பு வலயத்திற்கு உள்ளேயும், 25 நாட்டின் மற்றைய பல்வேறு பகுதிகளிலும் காணப்பட்டன.

1989 இல் கொழும்பு பெரும்பாகப் பொருளாதார ஆணைக்குழு தொழில் முயற்சிகளிலுள்ள தொழில்நிலை 12 சதவீதத்தினால் அதிகரித்ததன் மூலம் இம்முயற்சிகளிலுள்ள தொழில்நிலையின் மொத்த எண்ணிக்கை 61,429 இற்கு அதிகரித்தது. இதில் 42,925 அல்லது 70 சதவீதத்தினர் புடவை, அணியும் ஆடைகள், தோல் உற்பத்திகள் என்பனவற்றில் ஈடுபட்டிருந்தனர். இவ்வாறிருந்துங்கூட கொழும்பு பெரும்பாகப் பொருளாதார ஆணைக்குழுவின் தொழில் முயற்சிகளுள் இவ்வகையிலுள்ள தொழில்நிலையின் சார்புரீதியிலான பங்கு 1988 இன் 73 சதவீதத்திலிருந்து 1989 இல் 70 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. கைத்தொழில் வகைகளுள் உணவு, குடிபானம், புகையிலை, உலோகமல்லாக் கனிப்பொருள் உற்பத்திகள் என்பன தொழில்நிலை உருவாக்கத்தில் உயர்ந்த வீதத்தினைப் பதிவு செய்தன.

அட்டவணை 1.24

## முதலீட்டு ஊக்குவிப்பு வலயம்—தொழில் வாய்ப்பும் ஏற்றுமதி வருவாய்களும் 1988—1989

| வகை | 1988 தொழில் நிலை (திசெம்பர் முடிவில்) எண்ணிக்கை | 1988 மொத்த ஏற்றுமதி வருவாய்கள் (க.ஏ.பெ.) ப இ.ரூ. | 1989(அ) தொழில் நிலை (திசெம்பர் முடிவில்) எண்ணிக்கை | 1989(அ) மொத்த ஏற்றுமதி வருவாய்கள் (க.ஏ.பெ.) ப. இ. ரூ.. |
|---|---|---|---|---|
| 1. உணவு, குடிபானங்கள், புகையிலை ... | 796 | 199 | 1,135 | 368 |
| 2. புடவைகள், அணியும் ஆடைகள், தோல் உற்பத்திகள் ... | 39,848 | 6,979 | 42,925 | 8,785 |
| 3. மரத்துண்டு மர உற்பத்திகள் (தளபாளங்கள் உட்பட) ... | 77 | 6 | 69 | 9 |
| 4. இரசாயனம், பெற்றோலியம், நிலக்கரி இறப்பர், பிளாத்திக்கு உற்பத்திகள் ... | 2,285 | 379 | 2,049 | 408 |
| 5. உலோகமல்லாத கனிப்பொருள் உற்பத்தி (பெற்றோலியமும் நிலக்கரியும் தவிர்த்து) | 2,817 | 667 | 4,431 | 657 |
| 6. உருவமைக்கப்பட்ட உலோக உற்பத்திகள் பொறிகளும் போக்குவரத்துக் கருவிகளும் | 1,202 | 414 | 1,287 | 672 |
| 7. வேறெங்கும் குறிப்பிடப்படாத உற்பத்திகள் ... | 3,680 | 497 | 5,312 | 636 |
| 8. பணிகள் (ஆ) ... | 3,921 | 405 | 4,221 | 244 |
| மொத்தம் ... | 54,626 | 9,546 | 61,429 | 11,779 |

மூலம்: கொழும்பு பெரும்பாக பொருளாதார ஆணைக்குழு

(அ) தற்காலிகமானவை.
(ஆ) "எயர் லங்கா" நீங்கலாக.

1989 இல் ஒப்புதலளிக்கப்பட்ட செயற்றிட்டங்களின் எதிர்பார்க்கப்பட்ட மொத்த முதலீடு ரூ. 19,810 இலட்சங்களாக இருந்தது. யப்பான், கொங்கொங், சிங்கப்பூர், மேற்கு சேர்மனி, தென் கொரியா, பெல்ஜியம், ஒல்லாந்து, சுவிற்சர்லாந்து போன்ற பல நாடுகளிலிருந்தும் வெளிநாட்டு முதலீட்டாளர்கள் வருகை தந்தனர். 1989 இல் கொழும்பு பெரும்பாகப் பொருளாதார ஆணைக்குழுவினால் ஒப்புதலளிக்கப்பட்ட செயற்றிட்டங்கள் தோல் காலணிகள், பைகள் மற்றும் பொதிகள், ஆடைகள் இறப்பர் உற்பத்திகள், காரிக்கன் துணிகளும் நூலும், ஒப்பனைத் தூரிகைகள், வலுவைச் சேமிக்கும் மின் குமிழ்கள், உயிர்த்துடிப் பூட்டப்பட்ட விகடச் சித்திரங்கள், மர உற்பத்திகள், அலங்கார மெழுகுதிரிகள், பீங்கான் உருவச் சிலைகள், மின்துணைக் கருவிகள், வைரங்களை வெட்டுதல் மற்றும் பட்டை தீட்டுதல் என்பனவற்றின் உற்பத்தியை உள்ளடக்கியிருந்தன.

கொழும்பு பெரும்பாகப் பொருளாதார ஆணைக்குழு தொழில் முயற்சிகளின் மொத்த ஏற்றுமதி வருவாய்கள் ரூ. 117,790 இலட்சமாக (சிஎஉ 2,550 இலட்சம்) விளங்கி முன்னைய ஆண்டினைவிட 1989 இல் 23 சதவீத அதிகரிப்பினைக் காட்டின. புடவை மற்றும் தைக்கப்பட்ட ஆடைகளிலிருந்தான ஏற்றுமதி வருவாய்கள் முன்னைய ஆண்டின் மட்டத்தினைவிட 26 சதவீதம் உயர்வானதாக இருந்ததுடன் முக்கிய வெளிநாட்டுச் செலாவணி உழைப்பாளராகத் தொடர்ந்தும் விளங்கி மொத்தப் பெறுகைகளில் 75 சதவீதத்திற்கு வகை கூறியது. புடவைகள் மற்றும் ஆடைகள் துறையிலுள்ள ஊழியரொருவருக்கான ஏற்றுமதி வருவாய்கள் முன்னைய ஆண்டின் ரூ. 175,130 உடன் ஒப்பிடுகையில் ரூ. 204,672 ஆக விள்ங்கியது. ஆய்விற்குரிய ஆண்டில் ஆடையல்லா தொழில் முயற்சிகளின் ஏற்றுமதிப் பெறுமதி 17 சதவீதத்தினால் அதிகரித்தது.